2012 *மார்ச்* 30]

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எந்தப் பகுதியிலே அதிகமாக பாம்புகள் நடமாடுகின்றன என்பதைக் குறிப்பிட்டுக் கூறுவாரேயானால், வனத் துறைமூலம் அந்தப் பாம்புகளை அப்புறப்படுத்தி, காப்புக் காட்டிற்குள்ளே விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

25—

நீர்த்தேக்கம்

***6941—திரு. இரா. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் தொகுதி, விசுவக்குடி கல்லாற்று நீர்த்தேக்கத் திட்டத்தைத் தொடங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இல்லை என்று சொல்லாமல் எதையும் பொதுப் பணித் துறை மூலமாகச் செய்ய வேண்டும், நீரைச் சேமிக்க வேண்டும் என்று உத்தரவிட்டு இருக்கிறார்கள். அதன்படி பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், தொண்டமான்துறை கிராமத்தில் விசுவக்குடி அருகிலே கல்லாற்று ஓடையின் குறுக்கே நபார்டு வங்கி நிதி உதவியுடன் ஒரு புதிய ஏரி அமைக்க அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது, ஒப்புதலும் வழங்கப்பட்டுவிட்டது. இப்பணியினை மேற்கோள்ள ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்டது. ஆனால், யாரும் கோரப்படாததால் ஒப்பந்தப்புள்ளி மாற்றுத் தேதிக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி முடிந்தபின் பணிகளை முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே உங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 மார்ச் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. இரா. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழைக்கும் தொண்டர்களுக்கு உதவிகள் செய்து, உண்மை தொண்டர்களுக்கு பதவிகள் நல்கி, புதிய சகாப்தம் படைக்கும் எங்கள் புறநானூற்றுத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா! கடைக்கோடியில் இருந்த இந்த மாணவனைக் கண்டெடுத்து, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினராக்கிய தங்கள் மலர்ப் பாதங்களில் கோடானு கோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன்.

முற்பகல் 10—45

பெரம்பலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, வேப்பன்தட்டை வட்டத்தின் அருகே பச்சை மலையையும், செம்மலையையும் இணைக்கின்ற விசுவக்குடி கல்லாற்று நீர்த்தேக்கத் திட்டம், மாண்புமிகு பொற்காலத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடையஆட்சியிலே 21—7—2005 அன்று 50 ஆண்டுக் கால அப்பகுதி விவசாயிகளினுடைய கோரிக்கையினை நிறைவேற்றுகின்ற முகத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டம், கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசாங்கத்தில், அம்மா கொண்டு வந்த திட்டம் என்கிற காரணத்தினாலே, அதைக் கிடப்பிலே போட்டார்கள். ஆனால், விவசாயிகளினுடைய நலனிலே அக்கறையுள்ள, வேளாண்மைத் துறையில் புதிய புரட்சியை ஏற்படுத்துகின்ற எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்தத் திட்டத்தை தூசி தட்டி எழுப்பி மீண்டும் அந்தத் திட்டத்திற்கு புத்துயிர் ஊட்டுகின்ற வகையில், 19 கோடி ரூபாய் நிதியை வல்லமையோடு வாரி வழங்கிய வான்மேகம் கொண்ட எங்கள் புரட்சித் தலைவி அம்மாவுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி விவசாயிகளின் சார்பாகக் கோடானு கோடி நன்றி மலர்களை நன்றியோடு காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

2012 மார்ச் 30]

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறண்ட பகுதிகளில், நீர் ஆதாரத்தைப் பெருக்குகின்ற வகையில், பொதுப் பணித் துறைக்குச் சொந்தமாக காட்டாற்று வெள்ளம் போல் ஓடிக்கொண்டிருக்கின்ற என்னுடைய திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட குண்டாறு, கவுண்டநதி போன்ற பகுதிகளில் விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய ஒரு நீர்த்தேக்கத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நதியிலே போதிய நீர்வரத்து இருப்பின், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, அந்தப் பணி நடைபெறும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வீ.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, ஒக்கூர் ஊராட்சிக்குட்பட்ட விளாம்பாக்கம் என்கிற கிராமத்தில், வெட்டாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்ட மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நதியிலே போதிய நீர் வரத்து இருப்பின், அது பரிசீலனை செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.